





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 08.12.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு செய்திகள்
- முக்கிய தினங்கள்












## தமிழக நிகழ்வுகள்

- **மத்திய பல்கலை கழகங்கள் பட்டியலில் காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம் புறகணிக்கப்பட்டுள்ளது.**
  - மத்திய அமைச்சரவை கூட்டத்தில் தில்லியில் உள்ள மத்திய சமஸ்கிருத பல்கலைகழகம், திருப்பதியில் உள்ள மத்திய சமஸ்கிருத நிகர்நிலை பல்கலைகழகம் ஆகியவற்றிற்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - மகாத்மா காந்தியின் சீடர்களான டி.எஸ். சௌந்தரம், ஜி.ராமச்சந்திரன் ஆகியோரால் 1956-ம் ஆண்டு திண்டுக்கல்லில் தொடங்கப்பட்டு, 1976-ம் ஆண்டு முதல் காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைகழகமாக செயல்பட்டு வருகிறது.
    - இந்திய அளவில் 14 கிராமிய கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
    - இவை மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நேரடி கல்வி நிறுவனங்கள் ஆகும்.

## தேசிய நிகழ்வுகள்

- **அகில இந்திய காவல்துறை தலைவர்கள் மாநாடு மகாராஷ்டிரா மாநிலம் புனே நகரில் நடைபெற்றது.**
  - பிரதமர் மோடி தலைமையில் மத்திய உள்துறை அமைச்சர்


WeShine Academy TM

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

- புனே-வில் உள்ள இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் இந்திய காவல் துறை தலைவர்கள் மாநாடு 3 நாட்கள் நடைபெறுகின்றன.
- **செய்தி துளிகள் :**
    - தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல்
    - தமிழக காவல்துறை தலைவர் ஜே.கே.திரிபாதி.
    - மாநில காவல்துறை அமைப்பானது மாநில அரசுகளின் உள்துறை அமைச்சகங்களின் கீழ் செயல்படும்.
    - இந்தியாவில் தமிழக காவல்துறை 5-ஆவது பெரிய காவல்துறை ஆகும்.

- **"உடான்" திட்டத்தின் கீழ் ஒடிஸாவின் 3 விமான நிலையங்கள் இணைத்துக் கொள்ள மத்திய அரசு ஒப்புதல்** அளித்துள்ளது.
    - ஜெய்போர், ரூர்கேலா மற்றும் உத்கேலா ஆகிய நகரங்களில் உள்ள விமான நிலையங்கள் இணைக்கப்பட்டுள்ளன.
    - 3 விமான நிலையங்களை மேம்படுத்துவதற்காக உடான் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 160 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.
    - **செய்தி துளிகள் :**
        - நாட்டில் உள்ள சிறு நகரங்களை விமான போக்குவரத்து வசதி மூலம் இணைப்பதற்காக கடந்த 2017-ம் ஆண்டு "உடான்" திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது.


We Shine Academy™

- உடான் திட்டத்தின் இலக்கு – "சாதாரண மக்களும் விமானத்தில் குறைந்த கட்டணத்தில் பறப்பது"
- மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் - ஹர்தீப் சிங் பூரி.

## விளையாட்டுச் செய்திகள்

- **தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த அனுராதா தங்கப்பதக்கம்** வென்றார்.
  - 13-ஆவது தெற்காசியப் போட்டிகள் காத்மண்டு மற்றும் பொக்காராவில் நடைபெற்று வருகின்றன.
  - ஆடவர் ஈட்டி எறிதலில் பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதிம் தங்கம் வென்று ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார்.
  - **செய்தி துளிகள் :**
    - தெற்காசிய விளையாட்டுப் போட்டி 2 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றன.
    - முதல் தெற்காசிய விளையாட்டுப் போட்டி 1984-ம் ஆண்டு நேபாளத்தில் நடைபெற்றது.

- **ஆடவர் சர்வதேச போட்டியில் பணிபுரியும் முதல் இந்திய பெண் நடுவர் என்ற சிறப்பை பெறுகிறார் ஜி.எஸ்.லட்சுமி**
  - ஐக்கிய அரபு அமீரகம் - அமெரிக்கா இடையே நடைபெற உள்ள போட்டியில் நடுவராக செயல்பட உள்ளார்.
  - **செய்தி துளிகள் :**
    - 2019 மே மாதம் சர்வதேச நடுவர்கள் பட்டியலில்

WeShine Academy™

சேர்க்கப்பட்ட முதல் பெண் நடுவர் ஜி.எஸ். லட்சுமி ஆவார்.

- 1999 ஆண்டு இந்திய பெண்கள் அணியின் வேகபந்து வீச்சாளராக செயல்பட்டார்.

## முக்கிய தினங்கள்

- **படைவீரர் கொடி நாள் - டிசம்பர் 7**
  - நோக்கம் - தாய் நாட்டின் எல்லைகளை இரவு பகலாகக் காத்து வரும் முப்படை வீரர்களின் தியாகங்களை போற்றும் வகையில் கெண்டாடப்படுகிறது.
  - 1949-ம் ஆண்டு டிசம்பர் 7ம் தேதி இத்தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

We Shine Academy TM

## திருக்குறள்

**குறள் எண் : 41**

அதிகாரம் : இல்வாழ்க்கை

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை**

**விளக்கம் :** இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகிறவன் அறத்தின் இயல்பை உடைய மூவருக்கும் நல்வழியில் நிலை பெற்ற துணையாவான்.